IN THE COURT OF MAGALIR NEETHIMANDRAM (FAST TRACK MAHILA COURT, UDHAGAMANDALAM) SESSIONS JUDGE OF THE NILGIRIS AT UDHAGAMANDALAM.

| | |
|---|---|
| Sessions | Spl.S.C. 51/2021 |
| | Prosecution |
| Deposition of witness for | LW 5 PW 3 |
| Name | சிவக்குமார். |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |
| Mobile No. | |
| Email I.D | |

உதகமண்டலம் மகிளா நீதிமன்றத்தில் 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் 5 ஆம் நாள் மனுதாரர் / எதிர்மனுதாரர் என்பவரின் சாட்சியாகிய PW 3 -ன் வாக்குமூலம் 1969-ஆம் ஆண்டு 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி திரு.கே.லிங்கம்., பி.எஸ்சி., எம்.எல்., நீதிபதி, குடும்பநல நீதிமன்றம், அமர்வு நீதிபதி, மகிளா நீதிமன்றம் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

**05.09.2024.**

எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் குவிமுசு பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து

நீதிமன்றத்தால் மனு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.

முதல் விசாரணை:-

நான் தற்போது சேரங்கோடு 2 விஏஓ உதவியாளராக பணியாற்றி வருகிறேன். நான் இந்த வழக்கு சமயத்தில் நெல்லியாறு 1 கிராமத்தில் விஏஓ உதவியாளராக பணியாற்றினேன். கடந்த 21.10.2020 ஆம் தேதி தேவாலா அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் அழைத்ததின் பெயரில் நானும் என்னுடன் விஏஓ யுவராஜ் என்பவரும் செம்பன் ஆதிவாசி காலனிக்கு சென்றோம். அங்க மணிகண்டன் என்பவரின் வீட்டை போலிசார் ஒரு வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள். அதில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். அந்த பார்வை மகஜர் அதசாஆ 2. பின்னர் அதே தினத்தன்று மாலை 4.00 மணியளவில் பந்தலூர் பஸ் நிலையத்தில் வைத்து இந்த வழக்கின் எதிரி மணிகண்டன் என்பவரை போலிசார் கைது செய்தனர். அப்போது தானாக முன்வந்து ஒரு வாக்குமூலம் கொடுத்தார். அதை போலிசார் பதிவு செய்து என்னிடமும் யுவராஜ் இடமும் கையொப்பம் வாங்கினார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது. அது அதசாஆ 3 ஆகும். ஆய்வாளர் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை:-

எதிரியின் வீட்டிற்கு சென்றதாக கூறுகிறேன் அருடை கதவு எண் எனக்கு தெரியுமா என்றால் கதவு எண் ஞாபகம் இல்லை. எதிரி தனது அடையாளம் சம்பந்தமாக தன்னுடைய அடையாள அட்டை எதுவும் போலிசாரிடம் கொடுத்தாரா என்றால் கிடையாது. ஒப்புதல் வாக்குமூலம் எதிரி கொடுக்கும் சமயத்தில் எங்களை

தவிர பொது மக்கள் யாரிடமாது ஆய்வாளர் கையொப்பம் வாங்கினாரா என்றால் கிடையாது. பார்வை மகஜர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து வைத்திருந்ததில் நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து விட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை:-

Sd/- Siva Kumar/

Typed down to my dictation, in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/ Thiru. K. Lingam/
(FAC) Sessions Judge,
Magalir Neethimandram,
(FTMC), Udhagamandalam.